26
34–47

தமிழ்நாடு அரசு
சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 14 தமிழ் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும், நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தி(தவ1–2) துறை

அரசாணை (நிலை) எண்.79

நாள்:2.03.2007.
திருவள்ளுவராண்டு–2038
விய – மாசி 18
படிக்க:

1. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண். 4024/தமிழ்–1, 2005, நாள்.27.07.2005.
2. அரசாணை(நிலை) எண்.261, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1–2) துறை, நாள் 14.11.2005.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண். 2867/தமிழ்–1, 2006, நாள்.13.02.2007.

*****

ஆணை

தமிழுக்கு பெருந்தொண்டாற்றிச் சிறப்பு மிக்க நூல்களைப் படைத்துள்ள தமிழ்ச் சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் அவர்களின் படைப்புகள் பெருமளவில் மக்களைச் சென்றடையும் நோக்கிலும் மேலே மூன்றில் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்ட செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து ஏற்று, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் திருவாளர்கள்

1. மாயூரம் வேதநாயகம் பிள்ளை ,
2. சக்தி வை. கோவிந்தன்,
3. தெ.பொ மீனாட்சி சுந்தரனார் மற்றும்
4. த.நா.குமாரசாமி

ஆகிய தமிழறிஞர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக அவர்களது மரபுரிமையர்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது. இந்த பரிவு தொகையினை அரசு மீள ஆய்வு செய்து மேற்படி நான்கு தமிழறிஞர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கியதால் பரிவுத் தொகையாக ஏற்கனவே அவர்களது மரபுரிமையாளர்களுக்கு ஒப்பளிப்பு செய்திட ஆணையிடப்பட்ட தலா ரூ.5,00,000/–க்கு பதிலாக தலா ரூ.6,00,000/– வீதம் மொத்தம் ரூ.24,00,000/– இலட்சம் (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து வழங்க ஆணையிடப்படுகிறது.

2. மேலும் தமிழுக்கு பெறும் தொண்டாற்றிய திருவாளர்கள் கா. சு. பிள்ளை புலவர் குலாம் காதிறு நாவலர் , தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், டாக்டர் சி.இலக்குவனார், மகாவித்வான் தண்டபாணி தேசிகர், தி.ஜ.ரங்கநாதன், (தி.ஜ.ர) நாரணதுரைக்கண்ணன், டாக்டர் மா.இ. ராசமாணிக்கனார், டாக்டர் வ.சுப.மாணிக்கம், புலவர் கா.கோவிந்தன் ஆகிய 10 தமிழ் சான்றோர்களின் நூல்கள் எழுத்துப்படிகள் அச்சில் உள்ள நூல்கள் மற்றும் அவர்கள் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக ஒவ்வொருவரின் குடும்பத்தாருக்கும் தலா ரூ.6,00,000/- வீதம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) 10 பேருக்கு மொத்தம் ரூ.60,00,000/- (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 1 - மற்றும் 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.84,00,000/- (ரூபாய் எண்பத்து நான்கு இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2202-பொதுக் கல்வி-05. மொழி வளர்ச்சி-800 ஏனைய செலவு - II மாநிலத் திட்டம் - JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள் பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09 உதவி மானியங்கள் - 03 குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள்"
> (த.தொ.கு. 2202 05 800 JE 0933)

4. பரிவுத் தொகையை பெறவரும் மரபுமையாளர்கள்/குடும்பத்தினருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு பொன்னாடை, காசோலை, பேழை, போக்குவரத்து பயணச் செலவு ,மதிய உணவு ,சிற்றுண்டி மற்றும் இதர சில்லறைச் செலவினங்களுக்காக, ஒவ்வொரு நூலாசிரியருக்கும் ரூ.5,000 /- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 14 பேருக்கு ரூ.70,000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2202-பொதுக் கல்வி-05. மொழி வளர்ச்சி-800 ஏனைய செலவு - II மாநிலத் திட்டம் - JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 05 அலுவலகச் செலவுகள் - 02 ஏனைய சில்லறைச் செலவுகள்"
> (த.தொ.கு. 2202 05 800 JE 0522)

6. மேலே பத்தி 1, 2, (ம) 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதியொதுக்கம் 2006-2007-ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வகையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்களை உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது , அவை

ஏனையப இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை 600 001 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினங்கள் 2006–2007 இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும்.

7. மேலே பத்தி 1 மற்றும் 4–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2006–2007 –ஆம் ஆண்டின் இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் சேர்க்கத் தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 1,2,(ம) 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு 1–இன் பிரிவுக் கூறு 99–இன் கீழ் முன்பணமாக பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச் சீட்டுகளின் அடிப்படையில் முன்பணத் தொகைக்கான பட்டியலை சரிக்கட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

9. வருவாய் துறையினரின் மரபுரிமையர் சான்றின்படி உரிய மரபுரியர்களுக்குத் தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.12628/கல்வி – II/2007, நாள். 1.03.2007 –இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1684 – உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.இராசேந்திரன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
14 நூலாசிரியர்களின் குடும்பத்தினர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம்)
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை –1
மாநிலகணக்காய்வு தலைவர், சென்னை – 18/35.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
நிதி (கல்விII / வ.செ.பொ II)துறை, சென்னை–9.
இ.கோ/உ.திரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3.3.2007
(ச.வின்சென்ட் தினகர் ஞானஒளிவு)
அரசு சார்புச் செயலாளர்

3.3.07

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பு – 20 தமிழ்ச் சான்றோர்களின் அனைத்து படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை

அரசாணை (நிலை) எண். 170

நாள் 21.05.2007
*(திருவள்ளுவராண்டு 2038,*
*சர்வஜித் – வைகாசி–7)*

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.261, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 14.11.2005.
2. அரசாணை (நிலை) எண்.79, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள் 2.3.2007.

படிக்க:

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.ந.க.எண்.4020/தமிழ்1/2007, நாள் 18.5.2007.

*****

ஆணை:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23.3.2007 அன்று 2007–2008ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத்தொகை வழங்கப்படுவதுடன் தமிழ்ச் சான்றோர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அறிவிப்பைத் தொடர்ந்து இப்பொருண்மை தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து விரிவான அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வரசாணையின் இணைப்பில் காணும் 20 தமிழ்ச் சான்றோர்களின் இலக்கிய படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக ஒவ்வொருவரின் மரபுரிமையாளர்களுக்கும் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கும் பொருட்டு, ரூ.1,80,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே எண்பது இலட்சங்கள் மட்டும்) ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

...2

4. மேலே பத்தி 3இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.1,80,00,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பது இலட்சங்கள் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி–05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள்–II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி மானியங்கள் – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள்
(த.தொ.கு.2202 05 800 JE 0933)

5. பரிவுத் தொகையைப் பெறவரும் மரபுரிமையர்கள் குடும்பத்தினர் சென்னை வந்து செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் ஏனைய செலவினத்துக்காக ஒவ்வொரு நூலாசிரியரின் மரபுரிமையருக்கும் ரூ.5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் 20 பேருக்கு ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

"2202. பொதுக்கல்வி –05. மொழி வளர்ச்சி–800. ஏனைய செலவுகள் –II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை –05. அலுவலகச் செலவுகள் –02. ஏனைய சில்லறைச் செலவுகள்."
(த.தொ.கு.2202 05 800 JE 0522)

7. மேலே பத்தி 4இல் காணப்படும் கணக்குத் தலைப்பில் 2007–2008 வரவு செலவு திட்டத்தில் ரூ.1,00,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் நூல்கள் நாட்டுடைமையாக்கி பரிவுத்தொகை வழங்க ரூ.98,00,000/– ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே நூல்கள் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்குவதற்கு ரூ.82,00,000/– கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்படுகிறது. இக்கூடுதல் செலவினம் "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். பேரவையின் ஒப்புதல் உரிய காலத்தில் பெறப்படும். பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன்மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் கோரி உரிய படிவத்தில் நிதி (வரவு–செலவு பொது–I) பிரிவிற்கு விண்ணப்பிக்கும்படி தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5இல் ஒப்புவிக்கப்பட்ட தொகைக்கான நிதியொதுக்கம் 2007–2008ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதி ஒதுக்கத்தை எதிர்நோக்கி அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்கள் உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவற்றை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600 001 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

...3

9. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2007–2008ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் சேர்க்கத் தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 3 மற்றும் 5இல் ஒப்பளிக்கப்பட்ட பரிவுத்தொகை மற்றும் சில்லறைச் செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1 பிரிவுக்கூறு 99இன்கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகள் மூலம் முன்பணத் தொகைக்கான பட்டியலை நேர் செய்யவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

11. வருவாய்த் துறையினரின் மரபுரிமையர் சான்றுகளின் அடிப்படையில் உரிய மரபுரிமையர்களுக்கு மேற்கண்ட தொகையை பகிர்ந்தளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

12. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.148/கூசெ(ஜி.வி)/2007, நாள் 21.5.2007–இல் பெற்ற இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.147 (நூற்று நாற்பத்தேழு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து. இராசேந்திரன்
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
நகல்:
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி (த.வ.,அ.நி.(ம)செ/வ.செ.பொ I/வ.செ.பொ II) துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

21.5.07

# இணைப்பு

**அரசாணை (நிலை) எண். 170, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள் 21.05.2007**

| வ.எண் | தமிழ் சான்றோர்களின் பெயர் திருவாளர்கள் | ஒப்பளிக்கப்பட்ட பரிவுத் தொகை |
|---|---|---|
| 1 | ம.சிங்காரவேலர் | ரூ.15.00இலட்சம்<br>(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) |
| 2. | தவத்திரு குன்றக்குடி அடிகளார் | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 3. | கி.ஆ.பெ.விசுவநாதம் | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 4. | கி.வா.ஜகந்நாதன் | ரூ.15.00 இலட்சம்<br>(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) |
| 5. | அ.ச.ஞானசம்பந்தன் | ரூ.15.00 இலட்சம்<br>(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) |
| 6. | திருக்குறளார் வீ.முனுசாமி | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 7. | கவிஞர் சுரதா | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 8. | சாவி | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |
| 9. | மாவெண்கோ (எ) வீ.கோ.சண்முகம் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 10. | தீபம் நா.பார்த்தசாரதி | ரூ.15.00 இலட்சம்<br>(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) |
| 11. | எஸ்.எஸ்.தென்னரசு | ரூ.10.00 இலட்சம்<br>(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) |

| | | |
|---|---|---|
| 12. | கவிஞர் வாணிதாசன் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 13. | கவிஞர் கருணானந்தம் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 14. | அவ்வை துரைசாமி பிள்ளை | ரூ.15.00 இலட்சம்<br>(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) |
| 15. | ஜலகண்டபுரம் ப.கண்ணன் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 16. | டி.கே.சீனிவாசன் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 17. | சி.பி.சிற்றரசு | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 18. | ஏ.வி.பி. ஆசைத்தம்பி | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 19. | இராம. அரங்கண்ணல் | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 20. | மருதகாசி | ரூ.5.00 இலட்சம்<br>(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |

து.இராசேந்திரன்
அரசுச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

21.5.07